

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நல உதவிகள் வழங்கினார்.

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## டாக்டர் சுபேர்கான் தலைமையில்

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, நவ. 27 - "சிறுபான்மையினர் போற்றும் இளம் தலைவர்" பிறந்தநாள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) ஏற்பாட்டில் நடைபெற்றது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் - துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை இராயப்பேட்டை புதுக்கல்லூரி கலையரங்கில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

முன்னதாக, வரவேற்புரையாற்றிய மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் பேசுகையில், கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்கள், சிறுபான்மையின மக்களுக்கு இன்னல் என்றால் அடுத்த நொடி, நான் இருக்கிறேன் என்று (உடுக்கை இழந்தவன் கைபோல) களத்தில் இறங்கி களமாடும் கழகத்தின் எதிர்காலம், பார் போற்றும் திராவிடமாடல் அரசின் நம்பிக்கை உதயம்; வீம்பு செய்திடும் வீணர்களை விரல் அசைவில் விரட்டிடும் கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவினை இளையோர் எழுச்சி நாளாக, சிறுபான்மையின மக்கள் போற்றும் விழாவாக, மாற்றுத்திறனாளிகள், ஏழை எளிய சிறுபான்மையின மக்களுடன் கொண்டாடுவதை விட ஒரு சிறப்பு வேறொன்றுமில்லை' என்றார்.

அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியது முதல் இதுநாள் வரை சிறுபான்மையின மக்களின் நலனுக்காக இயற்றிய திட்டங்கள் மற்றும் சாதனைகளின் தொகுப்பை கடந்த 04.11.2025 அன்று "அன்றும்!. இன்றும்!. என்றும்!. சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க.," எனும் தலைப்பிலான ஆவண புத்தகத்தை கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் வெளியிட்ட நிகழ்வினை சுட்டிக்காட்டி, சிறுபான்மையின மக்கள் வாழ்வு மேம்பட எண்ணற்ற நலத்திட்டங்கள் தீட்டுவது மட்டுமல்லாமல் சிறுபான்மையின மக்கள் உரிமைகளை பறிக்கத்துடிக்கும் SIR போன்ற சதித்திட்டங்களை முறியடிக்கும் பேராண்மைகொண்ட ஒரே இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் விளங்குகிறது என்று கூறினார்.

மேலும், இப்பேரியக்கத்தின் கொள்கை தொடர்ச்சியாக நம்முடைய இளம்தலைவர் அவர்கள், "இந்தியாவிலேயே சிறுபான்மையினர் பாதுகாப்பாக வாழக்கூடிய நிலப்பகுதி உண்டென்றால் அது நம்ம தமிழ்நாடுதான்" என்று கடந்த ரமலான் நோன்பு திறப்பு நிகழ்வில் கூறியதை சுட்டிக்காட்டியதுடன் சிறுபான்மையினரின் ஆதரவு தங்களுக்கே என வாய்ச்சவடால் விடும், அரசியல் கோமாளிகளுக்கும், அடிமைக் கூட்டங்களுக்கும் மற்றும் அட்டக்கத்திகளுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் சிறுபான்மையின மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கழகத்தலைவர் அவர்களை மீண்டும் இரண்டாவது முறையாகவும், கழகத்தை ஏழாவது முறையாகவும் ஆட்சியில் அமர்த்தி பதிலுரைப்போம்' என்று கூறினார்.

நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு அவர்களின் உரையைத் தொடர்ந்து, சிறப்புரை யாற்றிய அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறுபான்மையினரை போற்றும் இளம் தலைவரின் பிறந்தநாள் விழாவினை, சிறுபான்மையினர் போற்றும் விழாவாக, சிறுபான்மையின மக்களுடன் கொண்டாடுவது தான் தனிச்சிறப்பு என்றதுடன், தான் முனைவர் பட்டம் பெற்று பங்கேற்கும் முதல் நிகழ்ச்சி சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் அவர்கள் நடத்தும் இளம் தலைவரின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி என்று கூறி பெருமிதத்துடன் கழகத்திற்கும், சிறுபான்மையின மக்களுக்குமான இணிமையான உறவை எடுத்துரைத்தார்.

பாசிசம் சிறுபான்மையின மக்களை வீழ்த்த எண்ணி என்.ஆர்.சி, சி.ஏ.ஏ. என்.பி.ஆர். போன்ற சதித் திட்டமாக இருந்தாலும் சரி, கல்வி உரிமையை பறிக்கும் புதிய கல்விக் கொள்கை திட்டமாக இருந்தாலும் சரி, அடிப்படை வாக்குரிமையை பறிக்கத் துடிக்கும் SIR போன்ற எத்தகைய சதிகார திட்டமாக இருந்தாலும் சரி என்றைக்கும் சிறுபான்மையின மக்களின் பக்கம் நின்று உரிமைகளைக் காக்கும் துணிச்சல் மிக்க ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என எடுத்துரைத்தார்.

மேலும், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் தஞ்சை சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவைச் சேர்ந்த எல்.எஸ்.ஹாஜிமுகமது அவர்களின் ஏற்பாட்டில் உருவான "நாளைய சரித்திரமே" பாடலை வெளியிட்டதுடன், செவித்திறன் குறைபாடுடைய ஏழை மாணவர்களுக்கு காது கேட்பு கருவி, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, மார்கக் கல்வி பயிலும் மதரஸா மாணவர்களுக்கு திருக்குர்ஆன் உடன் புத்தாடைகள், உலமாக்களுக்கு புத்தாடைகளுடன் நலத்திட்ட உதவிகள் மற்றும் கிறித்துவ உபதேசியர்களுக்கு புத்தாடைகளுடன் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார்.

மேலும், இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் தலைவர் டி.பி.எம்.மைதீன்கான், இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, துணைச் செயலாளர்கள் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல் கான், முனவர் ஜான், கா.ரபி அகமது, சாகுல் அமீது, ராபர்ட் @ ராஜதுரை, இராஜேஷ் ஜெயின் மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், சேப்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன், 115வது வட்ட கழகச் செயலாளர் ஜி.வெங்கடேஷ், 115 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வேங்கடசன் மற்றும் சிறுபான்மையின மாணவ மாணவிகள், உலமாக்கள் மற்றும் தேவாலய உபதேசியர்களுடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பித்தனர். நிறைவாக, சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச்.ரஹமத்துல்லா நன்றியுரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வாசுகி முருகேசன்

### நவம்பர் 27 (2009)



கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.

கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.

1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

"பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# துணை முதலமைச்சரே வாழ்க ! வாழ்க!



நீ
பெரியாரின்
வாசகசாலை!
அறிஞர் அண்ணாவின்
பாடசாலை !
நடப்பது
கலைஞர் சாலை!
கொடி நடுவது
தலைவர்
மு.க.ஸ்டாலின் பாதை !

பல நேரங்களில்
நீ
காந்தியின் கைத்தடி !
அனைத்து
நேரங்களில்
நீ
பெரியார் கைத்தடி !

அரசியலில் இடியை
சுருட்டி வைத்து
சதுரங்கம்
விளையாட்டுவாய் !

பிறையைப் பார்க்கிறேன்
நீ வளர்கிறாய் !

நட்சத்திரம் பார்க்கிறேன்
நம்பிக்கையாய்
தெரிகிறாய் !

உனக்கும்
காற்றுக்கும்
போட்டி
ஓழிக் கொண்டே இருப்பதில் !

உனக்கும்
காவிரிக்கும்
போட்டி
ஊருக்கு
உழைப்பதில் !

ஒருவர்
தீப்பிழம்பு என்கிறார்
வேறொருவர்
தீச்சூளை என்கிறார்
ஆனால்
திராட்சைத் தோட்டம் நீ !

மாநில சுயாட்சி
கருத்துகளுக்கு
அச்சாணி நீ !

ஒரு பக்கம்
அய்யா கலைஞர்
மறு பக்கம்
தலைவர் ஸ்டாலின்
நாணயத்தின்
அச்சானாய் நீ !

சந்தன மரங்களின்
சந்தங்களில்
பூபாளம் நீ !

தண்ணீர்
மேகங்களை
வழி நடத்தும்
ஆகாயம் நீ !

சேனாதிபதியே
உன் குரலோசை!
பகை வெல்லும்
வாளோசைநீ !

சாதி ஆதிக்கம் மீது
காட்டாறின்
சலங்கையாட்டம் நீ !

இனம் காக்கும்
போரில்
கடும் காற்றின்
கபடியாட்டம் நீ !

பறவைகள்
நம்பி வாழும்
வேடந்தாங்கல் நீ !

தானாக விழுந்து
ஒவ்வொரு
நெல் மணியாக
வாழ வைக்கும்
மழைநீ !

அறிவுத் திருவிழா
செதுக்கும்
வள்ளுவர்
கோட்டத் தேர் நீ !

விழ வைத்து
காய்களை
அள்ளும்
பல்லாங்குழி ஆட்டம் நீ

புரட்சியாளர்களை
வளர்க்க
புத்தகங்களை
விதைக்கிறாய் !

தீ எரியும்
பெரியார் திடலில்
நின்றே
கருத்தைக் கதைக்கிறாய்!

உதயநிதி ஸ்டாலின்
பிறந்தநாள்
தலைவர்
மு.க ஸ்டாலினை
மீண்டும்
ஆட்சியில் அமர்ந்த
உறுதி எடுக்கும் நாள் !

பார்த்தசாரதி கோவிலில்
பள்ளி வாசலில்
தேவாலயத்தில்
இருப்பவர்களை
அன்பால் நெஞ்சில்
அள்ளி எடுப்பான் !

திருவல்லிக்கேணி
சேப்பாக்கத்தில்
நடமாடும் நூலகம்
தந்து
புதுமை படைப்பான் !

விரும்பாமல் கடக்கும்
மக்களுக்கும்
விரும்பும்படி
உழைப்பான் !

மின்சாரத்தில்
புள்ளி வைத்து
மின்னலில்
வில் எடுப்பான் !

இனப்பகைவர்
கருத்தின்
கதை முடிக்க
சொல் தொடுப்பான் !

திருக்குறளை
கொடியில்
பறக்க வைப்பான் !

தமிழ் காக்க
தன்னுயிர் தரும்
நிமிர் தோள் இளைஞர்
கூட்டத்திற்கு
தலைமை ஏற்பான்!

ஒரு செங்கல் காட்டி
தில்லி
செங்கோட்டையை
தோற்கடிப்பான் !

ஈரோடு
காஞ்சிபுரம்
திருக்குவளைக்
கோட்டத்தில்
காவல் இருப்பான்!

நூல்களை
அச்சடிப்பது
படிக்க வைப்பது
அக்கருத்தை
பேச வைப்பது நீ
புரட்சி இயக்கத்தின்
புதல்வன் !

ஒன்றியத்தில்
நீயே
முன்னேற்றத்திற்கு
துணை முதல்வன் !

கவிதை சுமக்கும்
சந்தமே வாழ்க !
பூக்களைச் சுமக்கும்
கொடியே வாழ்க !

பண் வாழ்த்தும்
யாழே வாழ்க !
கொள்கையாளர்
வாழ்த்தும்
உதயநிதி ஸ்டாலினே
வாழ்க ! வாழ்க!



**ஈரோடு இறைவன்**
தி.மு.க .
இலக்கிய அணி
இணைச் செயலாளர்



வேலூர் சத்துவாச்சாரி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ – மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வழங்கினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், பகுதி செயலாளர் ஆர்.இ.பி.சதீஷ்குமார், மாமன்ற உறுப்பினர் சக்கரவர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.